-8 FEB 2000
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 24 செவ்வாய்க்கிழமை (08 - 02 - 2000) VALAMPURI ஒலி: 51

## ★ மீன்பிடித் தடையின் கொடுமையை எதிர்த்து

# கடற்றொழிலாளர் ஆயிரக்கணக்கில் திரண்டு நேற்று ஆர்ப்பாட்ட பேரணி

### குழந்தைகள் வயோதிபர்கள் பலர் கலந்துகொண்டனர்

— அலுவலகச் செய்தியாளர் எம். எஸ். பவான் —

யாழ். கடல்நீரேரியில் மீன் பிடிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் விதித்துள்ள தடையை நீக்குமாறும் சுமார் இரண்டு மாதகாலமாக கடலில் இருந்து அழிந்து போகும் நிலையில் உள்ள பல கோடி ரூபா பெறுமதியான மீன் பிடி உபகரணங்களை எடுப்பதற்கு அனுமதி கோரியும் நேற்று ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இப் பேரணியில் பல் வேறு கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கடற்றொழிலாளர்கள் கலந்து கொண்டு பதாகைகளினாலும் கோஷங்களினாலும் தமது உள்ளக் குமுறல்களை வெளிக் காட்டினர்.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்களை கடந்த டிசம்பர் மாதம் 11ஆம் திகதியிலிருந்து மீன் பிடிப்பதற்குள்ள தடையை நீக்குமாறு கோரியும் கடலிலுள்ள தமது பலகோடி ரூபா பெறுமதியான கடல் உபகரணங்களை எடுப்பதற்கு அனுமதி கோரியும் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.

### ஊர்வலத்தில் எழுப்பப்பட்ட கோஷங்கள்

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கடற்றொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட கண்டனப் பேரணியில் எழுப்பப்பட்ட கோஷங்கள் வருமாறு,

★ அரசே பிச்சை போட வேண்டாம் கடலைத் திறந்து விடு.

★ அரசே எம்மக்களின் வயிற்றில் அடிக்காதீர்

★ அரசே கொண்டாட்டம் உனக்கு, திண்டாட்டம் எமக்கு,

★ மக்களின் அடிப்படை உரிமையை மீறாதே.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பல்லாயிரக் கணக்கான மக்கள் குழந்தைகள் மாணவர்கள் கலந்து கொண்ட இப்பேரணி நேற்றுக்காலை 10மணியளவில் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி பிரதான வீதியூடாகச் சென்று கோவில் வீதியால் சர்வதேச செஞ்சிலுவைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு கடற்றொழிலாளர் சங்கங்கள்மகஜர்!

மீன்பிடித் தொழிலையே தமது சீவனோபாயத் தொழிலாகக் கொண்ட குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, கோகிலாக்கண்டி தனங்கிளப்பு ஆகிய பகுதிகளில் செறிந்து வாழும் மீனவர்கள் மீன் பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டநிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ்வாறு கடற்றொழிலாளர் சங்கங்களினால் ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 95ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பாரிய இடப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதியுடன் தமிழ்க்கட்சிப்பிரதிநிதிகள் அலரிமாளிகையில் இன்று சந்திப்பு

அரசியல் அமைப்புச்சீர்திருத்தம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவுடன் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று மாலை சந்திக்கிறார்கள்.

அலரிமாளிகையில் நடைபெறவிருக்கும் இச் சந்திப்பில் புளொட் அமைப்பின் சார்பில் த.சித்தார்த்தன் எம்.பியும், ஈ. பி. டி. பி. யைச் சேர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பிணையில் விடப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு குற்றப்புலனாய்வுப்பிரிவினரின் பணிப்பின் பேரில் சுன்னாகம் கராஜ்சில் தரித்துநின்ற 427082 இலக்க லொறி தொடர்பா

[6ஆம் பக்கம் பார்க்க]

### மண்ணெண்ணெய் லீற்றர் 3ரூபாவாலும் டீசல் 5ரூபாவாலும் அதிகரிப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றின் விலைகள் அதிகரித்திருப்பதாக அரசு அறிவித்துள்ளது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 3 ரூபாவாலும், ஒரு லீற்றர் டீசல் 5 ரூபாவாலும் அதிகரித்துள்ளது.

இவ் விலை அதிகரிப்பின் பிரகாரம் கொழும்பில் ஒரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இம்முறை அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துவாக்களிப்பதாக ஐ.தே. கட்சிமுடிவு

(கொழும்பு)

பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அரசியல்வாதியைத் தாக்கி அச்சுறுத்தும் நடவடிக்கைகளை அரசு உடன் தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் இல்லாவிட்டால் அதை எதிர்த்து சாத்வீகப் போராட்டம் நடத்துவதெனவும் ஐ. தே, கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று ஸ்ரீ கோதாவில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெற்ற செயற்குழு மற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சாரதாம்பாள் படுகொலை

### விசாரணை அறிக்கைகளுடன் ஆஜராகவும் தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவு

(கொழும்பு)

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபின் கொலை செய்யப்பட்ட புங்குதீவு சாரதாம்பாள் கொலை தொடர்பாக விசாரணை அறிக்கைகளுடன் குற்றப்புலனாய்வுப் பிரிவினை ஆராயும்படி தொல்லை தவிர்ப்புக்குழு நேற்று உத்தரவிட்டுள்ளது.

விஞ்ஞான தொழில்நுட்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 150 இளைஞர்கள் கைது தொடர்பாக

### பொலிசாரை ஆஜராக்கும்படி தொல்லை தவிர்ப்புக் குழு உத்தரவு

[கொழும்பு)

52வது சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்குப் பாதுகாப்பு முன்னேற்பாடாக வெலிக்கடை, ராஜகிரியள ஆகிய பகுதிகளில் கைது செய்த 150 வரையான இளைஞர்களை 4 மணித்தியாலங்களுக்குள் ஆஜர் செய்யாமையினால் நுகேகொட பொலிசாரை ஆஜராகும்படி தொல்லை தவிர்ப்புக் குழுவினர் உத்தரவிட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 150

(6 ஆம் பக்கம் பார்க்க)

### படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு மீசாலைப் பகுதியில் இளைஞர் பலி

தென்மராட்சி மீசாலை மேற்குப் பகுதியில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றைய தினம் காலை 8.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

வீதியால் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரைப் படையினர் சோதனைக்காக இடைநிறுத்திய போது சைக்கிளை விட்டிறங்கிய அவர் தப்பியோட முற்பட்டார் எனவும் அச் சமயம் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மொனறாகலைபஸ்குண்டுவெடிப்பில் இருவர் பலி 45பேர் வரை காயம்

(கொழும்பு)

நேற்றுக்காலை மொனறாகலை, பிபிலை பகுதிகளில் இரு வேறு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன், 45 பேர் காயமடைந்துமுள்ளனர்.

நேற்றுக் காலை 8.20 மணியளவில் நூறு பயணிகளை ஏற்றிக்கொண்டு பிபிலையிலிருந்து மொனறாகலை சென்றுகொண்டிருந்த பஸ் மெதகம நன்னபுரப் பகுதியை அண்மித்த போது பஸ்ஸிலி

(6ஆம் பக்கம் பார்க்க)

# கோழித்தீன் உணவு வகைகள்

# இங்கு தயாரிப்பதற்கு முயற்சி

## ஐ. நா. அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் தெரிவிப்பு

(கல்வயல்)

யாழ். மாவட்டத்தில் சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் கால் நடை கோழித்தீன் வகைகளை இங்கேயே தயாரிக்க முடியும். இவற்றைத் தயாரிப்பதற்காகவே ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டு இயந்திர சாதனங்கள் கொழும்பிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை வெகு விரைவில் யாழ்ப்பாணம் வருமென தெரியவருகின்றது.

கடந்த வாரம் கைதடியில் நடைபெற்ற நெல்வயல் அறுவடை விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின் ஆலோசகர் டாக்டர் திருமதி ஞா. சிவபாதசுந்தரம் இவ்வாறு கூறினார்.

கைதடி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் அமைந்துள்ள கமநல கேந்திர நிலையத்தில் நடைபெற்ற இந்த நெல் வயல் அறுவடை விழாவிற்கு யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளர் கே. சின்னத்துரை தலைமைதாங்கினார். கலாநிதி திருமதி சிவபாதசுந்தரம் தொடர்ந்து கூறியதாவது:-

1999-2000 ஆம் ஆண்டுக்கான இத் திட்டத்தின் கீழ் 50 ஹெக்ரெயர் நிலத்தில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் ஆரம்பமே பாரிய வெற்றியை அளித்துள்ளது. இந்த 2000 ஆம் ஆண்டில் 500 ஹெக்ரெயர் நிலத்தில் சோளப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. சோளப் பயிர்ச்செய்கை நெற்செய்கைக்கு எதிரானதல்ல. பரீட்சார்த்தமாகமேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கையில் பாரிய வெற்றியைக் கண்ட விவசாயிகள் சோளப் பயிர்ச்செய்கையையும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தென்மராட்சி பிரதேச செயலர் உட்பட பலர் உரையாற்றினர்.

(க)

## படகுகள் நடமாட்டம் அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற் பரப்பில் தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் 150 க்கும் அதிகமான தமிழக மீன்பிடிப் படகுகள் நெடுந்தீவுப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இதனால் தமது தொழில் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் கூறுகிறார்கள். (க)

## நிர்வாகிகள் தெரிவு

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேசஇளைஞர் கழகங்களின் சம்மேளன பொது நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

மாவட்ட இளைஞர்சேவைகள் மன்ற அதிகாரி அ.சக்திவேல் முன்னிலையில் இடம் பெற்ற இவ் நிர்வாகத்தெரிவில் தலைவராக க.அருமதாஸ் செயலாளராக எஸ்.கோகுலராஜா பொருளாளராக ந.மதீஸ்வரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க)

## தனங்களப்பு, மறவன்புலவு பகுதிகளில் கூட்டுறவுக் கிளைகள் இயங்கவில்லை

(தென்மராட்சி)

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தனங்களப்பு, மறவன் புலவு, கைதடி ,நாவற்குழி தெற்கு, கைதடி,நாவற்குழி, கோயிலாக்கண்டி ஆகிய ஐந்து கூட்டுறவுக் கிளைகள் இயங்காமல் இருந்து வருகின்றன.

இப்பகுதிகளில் குடியிருந்த குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளமையைத் தொடர்ந்து இக்கிளைகள் இயங்கவில்லை.

மேலும் இப் பகுதிகளில் முன்பு நிவாரணம் பெற்றுவந்தவர்களின் வசதி கருதி கைதடி சந்தியிலுள்ள கிளையில் நிவாரணம் வழங்கப்படுவதாக சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

[க-77]

## நான்குநாள் பயிற்சிப் பட்டறை

(புலோலி)

ஆரம்பபிள்ளைப்பருவ அபிவிருத்தி (முன்பள்ளி)உதவிக் கல்விப்பணிப்பாளர்களுக்கு திருகோணமலை வடக்கு—கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சில் நான்கு நாள் பயிற்சிப் பட்டறையொன்று நடைபெறுகின்றது.

இம்மாதம் 17ம் திகதி தொடக்கம் 20ம்திகதி வரை இப்பயற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

(க-52)

## சித்திர கண்காட்சி

(அல்லைப்பிட்டி)

தீவகக் கல்வி வலயத்தில் மாணவர்களின் அழகியல் திறனை வெளிக் கொணர்ந்து ஆக்கத்திறன் ஆற்றலை வளர்க்கும் முகமாக சித்திரக் கண்காட்சி ஒன்றினை நடாத்துவதற்கு அழகியல் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதிஎஸ்.ஸ்ரீராமச்சந்திரன் ஏற்பாடு செய்துள்ளார்.

தீவகத்தில் தற்போது இயங்கி வரும் 46பாடசாலைகளிலும் கனிஷ்ட,சிரேஷ்ட பிரிவுகளின் அடிப்படையில் கோட்டமட்டத்தில் இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

மேற்படி கண்காட்சிப் போட்டிகள் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய கல்விக்கோட்டங்களில் மார்ச் 8,15,22 ஆகிய திகதிகளில் நடைபெற்று.வலய மட்ட இறுதிக்கண்காட்சி மார்ச் 22ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறுமென தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் சுற்று நிருபம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

(க-46)

## நாளை அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தென் புலோலி ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளைபுதன்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து உற்சவம் நடைபெற்று 16 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 19 ஆம்திகதி மாசி மகத்தினத்தன்று தீர்த்த உற்சவமும் நடைபெறும். (க)

## ( இராசி பலன் )

08.02.2000 செவ்வாய்க் கிழமை

(தமிழுக்கு தை 25)

திருதியை இரவு9.01 வரை: பூரட்டாதி தருதசி 12.41 வரை, மரணயோகம்,இராகு காலம், மாலை 4.05 முதல் 5.33 வரை, சுப நேரம் காலை 11.34 முதல் 1.04 வரை.

**மேடம்:**
குறுப்புத்தனம், தொழில் பெருமை, சுபச் செய்தி.

**இடபம்:**
வாய்ப்பு உருவாதல், தாயார் உதவி, அயலவர் நட்பு,

**மிதுனம்:**
வாய்த்தகராறு. தொழில் பகை, மனக்கிலேசம்.

**கடகம்:**
கடின வாக்கு, சகோதரர் பகை, வழித்தொல்லை.

**சிங்கம்:**
அறிஞர் சந்திப்பு,பணவரவு, புதிய சிந்தனை.

**கன்னி:**
போட்டியில் வெற்றி, புதிய ஸ்தானம் பாராட்டு.

**துலாம்:**
காதல் சிறப்பு, வெகுமதி கிட்டுதல், மன்க்களிப்பு.

**விருச்சிகம்:**
வேதாந்தம்,கெட்ட கனவு, மனவேதனை.

**தனுசு:**
எதிர்பாராத நட்பு. காரியச் சிறப்பு. பெண் உதவி.

**மகரம்:**
அசமந்தப் போக்கு, வீண் கலவரம், பயனற்ற செயல்.

**கும்பம்:**
பிரச்சினைக்குத் தீர்வு, அதிகாரிகள் ஆதரவு, குடும்பச் சிறப்பு.

**மீனம்:**
போன இடத்தில் துயர், பணக் கஷ்டம் தீயோர் கவலை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
ரகுமான், விஜயசாந்தி நடித்த
சூர்யோதயம்
10. 30, 2. 30 (ப.நே)
மகளிருக்கு இடமுண்டு
(00115)

### இன்றைய நமது இளைஞர்கள்

# வேலைவாய்ப்புப் பெறுவதற்காக அதிக காலத்தை செலவழிக்கின்றனர்

## -இளைஞர் சேவை மன்ற அதிகாரி தெரிவிப்பு

(அச்சுவேலி)

நமது இளம் சமூகத்தினரில் பலர் தமது வாழ் நாளில் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்காக அதிக காலத்தை செலவிடுகின்றார்கள் இவர்களில் சிலர் தமது இலக்கினை எட்டிக் கொள்கின்ற போதிலும் பலர் முயற்சி செய்தும் பலன் கிடைக்காத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி அ. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கோப்பாய் பிரதேச செயலக கட்டடத்தில் நடைபெற்ற பிரதேச இளைஞர்கழக சம்மேளனங்களின் நிர்வாக தெரிவு வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்;

இன்றைய இளைஞர்கள் பலர் இளைஞர் சேவை மன்றங்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ளாது இன்றும் நம்மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் முதலில் இந்த மன்றங்களின் சரியான செயற்பாட்டினை அறிந்து கொள்வார்களே யானால் அதுவே அவர்களின் வாழ்க்கையில் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கான முதல் படி என்பதை தெளிவாக உணர்வார்கள்.

இன்று நாட்டில் உள்ள கிராமியமட்டம் முதல் தேசிய மட்டம் வரையிலான இளைஞர் கழகங்கள் மற்றும் இளைஞர் மன்றங்களினூடாக நமது இளம் சந்ததியினர் பல்துறைகளிலும் பயிற்றுவிக்கப்பட்டுள்ளார்கள். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் பலர் உள்நாட்டு வேலை வாய்புத் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இளைஞர்களின் அடிப்படைத் தேவைகளை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்ட இளைஞர் மன்றங்கள் இளைஞர்களின் வாழ்க்கையைச் சீர் செய்ய எதிர்காலத்தில் பல நடவடிக்கைகளை மேற் கொண்டிருப்பதுடன் அவர்களின் அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய காத்திருப்பதால் இளைஞர்களின் பங்களிப்பு என்றென்றும் அவசியமான தொன்றாகவே கருதப்படுகிறது. என்றார்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 15-12-1936



மறைவு: 10-01-2000

### திருமதி ஆசையன்னம் கந்தையா

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக்கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் நாளை (09-02-2000) புதன் கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், மச்சினர், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், பூட்டப்பிள்ளைகள்.**

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(கி/67)

## காணிக் கொள்வனவு

வட மாகாணம் யாழ். மாவட்டம் வலி தென் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக் கோட்டை இறை தெங்கன் தோட்டம், வீரன் திடலும் பிரம்படியும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. கே. செல்வரத்தினத்தினால் 250/ 05 - 09 - 1999ம் இலக்கத்தில் வரையப்பட்ட 90 துண்டு காணிகளையும் சாவல்கட்டு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வாங்கிக் கொடுத்தும், கொடுக்கவும் உள்ளது.

ஆனைக்கோட்டை வாசிகள் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கனகரத்தினம் கந்தசாமியும் பெண் மகாதேவியும் தங்கராசா நிர்மலராஜனும் பெண் கீதாஞ்சலியும் இங்கிலாந்தில் வசிக்கும் கந்தையாசிவகுமாரும் பெண்சாந்தினியும் கொழும்பில் வசிக்கும் வைரமுத்து பரமேஸ்வரனுக்கு வழங்கிய விற்பனை உரிமையின்படி விற்பனை செய்யவிருக்கிறார்.

மேற்படி காணிகள் சம்பந்தமாக மேற்காட்டியவைகள் தவிர வேறு யாருக்கும் உரிமைகள் ஏதும் இருப்பின் 21 நாள்களுக்கிடையில் சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஆனைக் கோட்டை என்ற விலாசத்திற்கு முறைப்பாடு செய்து பிரதியை பிரதேச செயலர் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய்க்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்.
சாவல்கட்டு கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம், ஆனைக்கோட்டை.

பதிவு இல: ţ/1675 OF 11-10-1982

(153)

### இந்தியாவில் பயங்கரவாதத்தை

# ஊக்குவிக்கும் கோழைத்தனமான செயல்களை பாக். கைவிடவேண்டும்

(புதுடில்லி)

இந்தியாவில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கின்ற கோழைத்தனமான செயல்களை பாகிஸ்தான் கைவிட வேண்டும் என இந்தியாவின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

காஸ்மீர் விவகாரம் தொடர்பான பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தாம் தீர்வுகாண விரும்புவதாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப் கூறியது தொடர்பாக கருத்து வெளியிட்ட போது அவ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவிக்கையில், --

பாகிஸ்தான்மேற்கொண்டு வருகின்ற தவறான பிரச்சாரங்களை கைவிட்டால் மட்டுமே அந்நாட்டுடன் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை உருவாக்க முடியும்.

காஸ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது தொடர்பாக இந்தியா பலதடவைகள் முன் முயற்சிகளை எடுத்திருக்கிறது. எனவே பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப் பேச்சுவார்த்தைக்கு இணக்கம் தெரிவித்திருப்பதானது எமக்கு வியப்பை ஏற்படுத்தவில்லை என்றும் அவ்அதிகாரி தெரிவித்தார்.

இப்பிரச்சினையில் மூன்றாவது நபர் அல்லது நாட்டின் தலையீட்டிற்கு இடமில்லை என்றும் இந்தியாவின் இந்த முடிவை, பிரதமர் வாஜ்பாய் பலதடவைகளில் உறுதிப்படுத்திஉள்ளார் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## தாய்வானில் நிலநடுக்கம்

(தைப்பி)

தாய்வானில் அண்மையில் சிறிய அளவிலான நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந் நிலநடுக்கம் மிகக் குறுகிய நேரத்தில் இடம்பெற்றதால்உயிர்ச் சேதமோ அன்றி பொருட் சேதமோ ஏற்பட்டதாக தெரியவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் தாய்வானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 2400பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

## 99 ஆயிரம் ரூபா போலிநோட்டுக்கள் இந்திய பிரஜையிடமிருந்து மீட்பு

(புதுடில்லி)

இந்திய பாகிஸ்தானிய எல்லையில் அஸ்ராரி ரயில் நிலையத்தில் இந்திய பிரஜை ஒருவரிடமிருந்து 99 ஆயிரம் ரூபாய்க்கான போலி 500 ரூபாய் நோட்டுக்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:- லாகூரில் இருந்து டில்லி சென்றுகொண்டிருந்த சம்யுக்தா எக்ஸ்பிரஸில் பயணம்செய்த டில்லியைச் சேர்ந்த வாஹிர்ரஹ்மான் என்பவரிடம் சுங்க அதிகாரிகள் சுங்கப் பரிசோதனையை மேற்கொண்ட போதே இந்த நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-5)

### பிலிப்பைன்ஸ்

## நகரமேயர் தேவாலயத்திற்குள் சுட்டுக் கொல்லப்பட்டார்

(மணிலா)

நகரமேயர் ஒருவர் தேவாலயத்திற்குள்வைத்து இனம் தெரியாத ஆயுதபாணிகளால் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பிலிப்பைன்சில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

தேவாலயத்தில்ஆராதனையை முடித்துக் கொண்டு வீடு திரும்ப முற்பட்டசமயம் வழிமறித்த ஆயுதம்தரித்த இருவர், நகரமேயரை தேவாலயத்திலேயே சுட்டுக் கொன்றுள்ளனர்.

நகரமேயர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கான காரணம் எதுவும் இதுவரையில் அறியப்படவில்லை.

இதேவேளையில் கொலை நபர்கள் இருவரும் செலூலர் தொலைபேசி ஒலிபரப்பு நிலையம் ஒன்றிற்குச் சென்று பணம் கேட்டதாகவும், கொடுக்க மறுத்தபோது மேற்படி நிலையத்தைத் தீவைத்துக் கொளுத்தி விட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-9)

## சிறப்புப்பெற்ற இராமகிருஷ்ணர் கோவில் மயிலாப்பூரில் குடமுழுக்கு

(சென்னை)

பெரிய அளவிலான இராமகிருஷ்ணர் கோயில் 6 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் மயிலாப்பூரில் நேற்று திங்கட்கிழமை குடமுழுக்கு செய்யப்பட்டது.

இதன் குட முழுக்கானது இராமகிருஷ்ண சங்கத்தலைவர் வணக்கத்திற்குரிய ஸ்ரீமத் சுவாமி ரங்கநாத் ஆனந்தர் மகாராஜ் அவர்களின் பொறுப்பில் செயற்படுத்தப்பட்டது.

இக்கோயிலானது 203 அடி நீளமும் 60 அடி அகலமும் 96 அடி உயரமும் கொண்ட விமானத்தை உடையதாக விளங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

மத வேறுபாடின்றி அநேகரும் வணங்கக் கூடிய ஆலயமாகவும் இக்கோவில் விளங்குவது இதற்குரிய தனிச் சிறப்பாகும். (க)

## ஆஸ்திரிய அரசியலில் புதியகட்சி நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள்

(இலண்டன்)

ஆஸ்திரியாவில் புதிய அரசியலில் கைடறன் வலதுசாரி சுதந்திரக்கட்சியும் இணைக்கப்படவுள்ளதாக ஒஸ்ரியா அரசு அறிவித்ததைத் தொடர்ந்து ஒஸ்ரியா முழுவதிலும் மக்கள் பலத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆஸ்திரியா அரசின் இம் முடிவால் அந்நாட்டு மக்கள் பெருமளவில் மனக்கொதிப்பு அடைந்து வன்முறைகளில் ஈடுபட்டு அரசாங்கத்திணைக்களங்கள் அலுவலகங்கள் முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

சுதந்திரக்கட்சி தலைமை அலுவலகம் முன்னால் மக்கள் பெருமளவில் கூடி ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளதால் பொலிஸ் படைகள் மிக விழிப்புடன் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வரும் மக்கள் மீது பொலிஸ் படைகள் கண்ணீர் குண்டுத் தாக்குதல்கள் நடாத்தி வருவதாகவும் தெரியவருகிறது.

ஆஸ்திரிய அரசில் கைடறன் வலதுசாரி சுதந்திரக் கட்சி இணைக்கப்படவுள்ளது. குறித்து உலக நாடுகள் பலவும் தமது கண்டனங்களைத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (க-9)

### தமிழகத்தில்

## வன்முறையில் ஈடுபட்டவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும்

### -செல்வி ஜெயலலிதா கோரிக்கை

அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா மீதான கொடைக்கானல் ஹோட்டல் வழக்கு சம்பந்தமாக ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பினைஎதிர்த்து மாநிலம் முழுவதும் வன்முறையில் ஈடுபட்டு கைதுசெய்யப்பட்ட அ.இ அ.தி.மு.க. தொண்டர்கள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்:- தமது கட்சியின் தொண்டர்கள் அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

ஆனால்பொலிஸார் பொய்யான வழக்குகளைப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்திருப்பதாகவும், அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். (க-5)

## ஈரானில் பாரிய குண்டுவெடிப்பில் ஒருவர் பலி பலர் காயம்!

(டெகரான்)

ஈரானில் அண்மையில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஈரான் தலைநகர் டெகரானில் நடந்த இக்குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் ஹிஸ்புல்லா கெரில்லாக்கள்எனக்கூறப்படுகிறது.

இதேவேளை இது போன்ற தாக்குதல்கள் இன்னமும் தொடரலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

### றுவாண்டா

## முன்னாள் இராணுவ அதிகாரி இலண்டனில் கைது செய்யப்பட்டார்

(லண்டன்)

றுவாண்டா நாட்டு முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரை குற்றவியல் தடுப்புப் பிரிவினர், லண்டனில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

தாஸிஸ் முவின்ஜி என்ற இந்த 46 வயதுடைய முன்னள் இராணுவ அதிகாரி, றுவாண்டாவில் ஏற்பட்ட இன அழிப்பு நடவடிக்கை மற்றும் வேறுபல குற்றங்கள் புரிந்தார் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தோற்றோ இன மக்கள் அதிகமாக வாழும் தென் றுவாண்டாவில் இராணுவ அதிகாரியாக பணியாற்றிய போது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தோற்றோ இன மக்கள் கொல்லப்பட காரணமாய் இருந்தவர் இந்த இராணுவ அதிகாரியே என நம்பப்படுகிறது.

இதேவேளையில் 1994 இல் றுவாண்டாவில் ஏற்பட்ட இன அழிப்பு நடவடிக்கையில் ஆயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டமைக்காக தாஸிஸ் முவன்ஜியை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மீறல்களுக்கான விசாரணைக்குழு, பலகாலமாகவே தேடிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது. (க-9)

## அரசியல் முக்கியத்துவம் பெறும் சோனியா - மூப்பனார் பேச்சு

### அரசியலில் மாற்றம் ஏற்படுமா?

(புதுடில்லி)

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் காங்கிரஸ் கட்சி தலைவி திருமதி சோனியா காந்தியை சந்தித்து பேச்சுவர்த்தை நடாத்தியுள்ளமை தமிழக அரசியலில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடுமென அரசியல் அவதானிகள் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மூப்பனார் சோனியாகாந்தி சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் என்ன என்பது பற்றி இன்னமும் தெளிவாக அறிவிக்கப் படவில்லை.

தமிழ் நாட்டில் 3 சட்டப் பேரவைகளுக்கான இடைத் தேர்தலில் அ. இ. அ. தி.மு.க. வேட்பாளர்களை ஆதரிப்பது என்று மூப்பனார் முடிவு செய்ததன் பின்னர், சோனியாவுடனான முதலாவது சந்திப்பு இதுவாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் புதுடில்லிப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய சமயம், செய்தியாளர்களுக்கு ஜி. கே. மூப்பனார் அளித்த பேட்டியில்,

தர்மபுரியில் 3 மாணவிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, ஜெயலலிதா சி. பி. ஐ. விசாரணை கோரி இருப்பது சரியானதே அப்போதுதான் முழுமையான உண்மை வெளிவரும் என்றும் தெரிவித்துள்ளார். (க-9)

**உலக வலம்**

## குரொஸ்னி மீதான தாக்குதல் நிறைவு ரஷ்ய பதில் அதிபர் புட்டின் அறிவிப்பு

(மொஸ்கோ)

செச்சினியாவின் தலைநகர் குரொஸ்னி மீது, ரஷ்யத் துருப்புக்கள் தங்களது தாக்குதல்களை மேலும் தீவிரப் படுத்தியுள்ளனர். இருந்த போதிலும் குரொஸ்னியில் சுமார் 1000 கிளர்ச்சிக்காரர்கள் இருப்பதாகவும் அதனால் குரொஸ்னி மீது மொஸ்கோ இன்னமும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முடியவில்லை என்று ரஷ்ய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதே வேளையில் கடந்த சில நாட்களில் குரொஸ்னியில் ரஷ்யக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த கிளர்ச்சிக்காரர்களில் 1500 பேர் தப்பிச் செல்ல முயன்றபோது கொல்லப்பட்டதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார். (க-5)

செச்சினியத் தலைநகர் குரொஸ்னி மீதான ரஷ்ய இராணுவத் தாக்குதல் முடிவிற்கு வந்துவிட்டதாக விளாடிமிர்புட்டின் நேற்று தெரிவித்துள்ளார். கிளர்ச்சியாளர்களின் கடைசி இருப்பிடமான செளதொஸ்கி மாவட்டமும் கைப்பற்றப்பட்டு விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறொஸ்னி கைப்பற்றப்பட்டமை குறித்து முன்னுக்குப் பின் முரனான செய்திகள் சமீப நாட்களாக வந்து கொண்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கு வராத

# இளைஞர், யுவதிகள் கல்வி குறித்து நாம் சிந்திக்க வேண்டியது அவசியம்

## சுந்தரம் டிவகலாலா அறிவுறுத்து

(புலோலி)

புதிய கல்வித் திட்டத்தின் கீழ் 2000ம் ஆண்டிலிருந்து ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தியில் அதிககவனம் செலுத்த வேண்டும் என கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைஅமைச்சு தீர்மானித்துள்ளது. இதற்கான பல்வேறு நடவடிக்கைகளையும் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு புதிய கல்வித் திட்டத்தின் கீழ் புதிதாக நியமனம் பெற்றுள்ள முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சுச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா அறிவித்திருக்கின்றார். அவரின் அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திக்கான சில செயற்திட்டங்களை அமைச்சு முன்மொழிந்துள்ளது. அத்துடன் இச்செயற்திட்டங்கள் கல்வி வலயங்களில் ஒழுங்காகவும், சிறப்பாகவும் செயல்படுத்தப்பட வேண்டும்.


கல்வி அபிவிருத்தியில் இதுவரை காலமும் நாம் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்களைப் பற்றியே சிந்தித்தும் செயல்பட்டும் வந்துள்ளோம். பாடசாலைக் கல்வி முறை என்பது மனித வள வளர்ச்சியை நோக்காக கொண்டதாகும். அவ்வாறெனின் பாடசாலைக்கு வருகை தராத குழந்தைகள் இளைஞர், யுவதிகள் ஆகியோரது மனித வளர்ச்சியினைப் பற்றியும் சிந்தித்துச் செயல்படா விட்டால் முழுமையான மனித வளர்ச்சியினை அடைய முடியாது என்பது மிகத் தெளிவாகின்றது.

ஆனால் எமது அமைச்சு 2000ம் ஆண்டிலிருந்து ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தியில் அதிக கவனமெடுக்கத் தீர்மானித்தது. இம் முக்கிய திட்டத்தினைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்கென அமைச்சு ஒவ்வொரு வலயத்திலும் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்களை நியமித்துள்ளது.

சில வலயங்களில் முறைசாராக் கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் அல்லது உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் இவ் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு வலயக்கல்விப் பணிப்பாளர்களின் சிபார்சின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி எமக்கு ஒரு புதிய துறையாக அமைவதனால் இத்துறையில் ஈடுபடுவோருக்கு பயிற்சிகள் வழங்கப்படவேண்டியது மிக முக்கியமாகின்றது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது. (க-52)

## மக்கள் மாண்பு



பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் திரு. வினாசித்தம்பி சேதுநாயகம் நீதி அமைச்சினால் யாழ். மாவட்ட சமர்தான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. ஆர். ரி விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தலை சிறந்த சமூக சேவையாளரான இவர் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைத்தலைவராகவும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தலைவராகவும், பருத்தித்துறை நகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவராகவும் புலோலி கிழக்கு ''சவனாய்'' விளையாட்டுக்கழகத் தலைவராகவும், யாழ். மாவட்ட கிராமசேவையாளர் சங்க பதில் தலைவராகவும் சிறப்பாகச் செயற்பட்டு ''கலைச்சிறப்பு சமூகசேவையாளர்'' என்ற பட்டத்தையும் பெற்றுக் கொண்டவராவார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தலை சிறந்த விளையாட்டு வீரருமாவார். (க-52)

# மட்டக்களப்பு பாஸ் நடைமுறை குறித்து அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிருப்தி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரால் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள ''பாஸ்'' நடைமுறை குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழு அதிருப்தியும் விசனமும் தெரிவித்துள்ளது.

இந் நிறைவேற்றுக் குழுவிற்கான கூட்டம் நேற்று முன் தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இந்த ''பாஸ்'' நடைமுறையினால்பொது மக்களே பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்படுள்ளது.

இதனால் விரைவில் ஒன்றியத்தில் பொதுமன்றம் கூட்டப்பட்டு இதற்கான எதிர்ப்பு நடவடிக்கை குறித்து ஆராயப்படவுள்ளதாக ஒன்றியச் செயலாளர் எம். கமலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ் ஒன்றியத்தில் 60 நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-5)

# ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் வாக்கெடுப்பு மூலம் தெரியப்படல் வேண்டும்

## விஜயபால மெண்டிஸ்

(கொழும்பு)

ஐ. தே. கட்சியின் தலைமைப்பதவிக்கு அங்கத்தவர் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று மாற்று அணியைச் சேர்ந்த விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார், தான் ஐ. தே. க. தலைமைக்கு போட்டியிடப் போவதாகவும் தெரிவித்த டேல்பஸ் ஐ. தே. கட்சித் தலைவர் செயலாளர், பொருலாளர். ஆகியோருக்கு இதுபற்றிய கடிதத்தை அனுப்பியுள்ளதாகவும் இந்த முடிவு ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய உறுப்பினர்கள் கட்சி அங்கத்தவர்களின் விருப்பின் பேரிலேயே எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இன்றைய நற்குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் சிற்பிகள்

## வகுப்பறைத் திறப்பு விழாவில் உரை

(கல்வயல்)

''இன்றைய குழந்தைதான் நாளைய சமுதாயத்தின் சிற்பிகள். நீங்கள் துவக்கி வைக்கும் செயல்களை தொடர்ந்து நிறைவேற்றி வைக்கும் நாளைய மனிதனே இன்றைய குழந்தை. இப்படியான உயர்ந்த குடிமகனை உருவாக்கச் சிறந்த கல்வி தேவை. ஆகவே இந்த நவீன கற்றல் வசதிகளைக்கொண்ட தரம் ஒன்றிற்கான வகுப்பறையைத் திறந்து வைப்பதில்பேருவகையடைகிறேன்.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட நவீன கற்றல் வசதிகளைக் கொண்ட தரம் ஒன்றிற்கானவகுப்பறையைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய வைத்திய கலாநிதி பேதுறு பிலிப்ஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலவர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் கடந்த 23ம் திகதி நடைபெற்ற இந்த வைபவத்தில் வைத்திய கலாநிதி பிலிப்ஸ் தொடர்ந்து கூறியதாவது:

குழந்தைகளுக்கு 3 வயது முதல் 10 வயது வரை கொடுக்கின்ற பயிற்சி, உருவாக்கும் பழக்க வழக்கங்கள், ஊட்டுகின்ற பண்புகள், குழந்தைகளின் உளவளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைகின்றன. மனிதகுலம் மழலைச் செல்வங்களுக்கு வாழ்க்கையில் எல்லாச் சிறப்புக்களையும் எல்லாத்துறைகளிலும் கொடுக்க மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. என்றார்

டாக்டர் திருமதி புஸ்பராணி லியோன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். (க)

# செய்தித் துளிகள்

## பரீட்சையில் சித்தி

(அல்லைப்பிட்டி)

தீவக கல்வி வலயப் பணிமனையில் பணிபுரியும் ஆ. ஆனந்தராசா சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பரீட்சையில் அதி சிறப்புத் தரத்தில் சித்தியடைந்துள்ளார்.

மாநகர சபை ஊழியரான இ. இரத்தினசிங்கம் அவர்களும் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-46)

## கணனிகள் வழங்க நடவடிக்கை

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு உதவும் பொருட்டு கணனிகளை வழங்க ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மத்தி. றோ. க. பெண்கள் வித்தியாலயம் நெடுந்தீவு மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்கும் இவை வழங்கப்படவுள்ளது. (க-82)

## உபகரணங்கள் அன்பளிப்பு

(தென்மராட்சி)

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தினால் தென்மராட்சிப் பகுதியிலுள்ள 133 விவசாயிகளுக்கு வாளி, கத்தி போன்ற உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் 81 பேருக்கும், கைதடி கமநல சேவை நிலையத்தில் 52 பேருக்கும், இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (77)

## பாடசாலை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பண வைபவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு செல்லையா சிவலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள் தெரிவு, அபிவிருத்தி, ஆகியன பற்றிய கலந்துரையாடலும் இடம் பெற்றது. (க)

## கல்விக்கண்காட்சி

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவுக் கல்விக் கண்காட்சியும் விளையாட்டு முற்றத் திறப்புவிழாவும் 9 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கோப்பாய்ப்பிரிவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி வை. தியாகராசா சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். மாதவகுமார் ஆகியோர் கலந்துகொள்வர். (க)

## சஞ்சிகை வெளியீடு

(ஊர்காவற்றுறை)

தேசியஇளைஞர்சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகத்தால் காலாண்டு வெளியிடப்படும் இளைஞன் நண்பன் என்ற சஞ்சிகை வெளியிடப்பட்டது. (க)

## விளையாட்டு மைதானம் புனரமைப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறை நகர சபையின் பொது விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை நகர சபை மேற்கொண்டுள்ளது.

வல்வை மகளிர் வித்தியாலயத்திற்கு அருகாமையில் நகரசபையின் இப்பொது விளையாட்டு மைதானம் அமைந்துள்ளது. (க-52)

## வரவேற்பு விழா

(புலோலி)

பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க புத்தாயிரம் ஆண்டு வரவேற்பு விழா கடனுதவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே. இராசரத்தினம் தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிலே பருத்தித்துறை பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவர் திரு. வி. ஸ்ரீராமச்சந்திரா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (க-52)

## எழுத்தாளர்களை தெரிவுசெய்யும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்கத்தினால் 21ஆம் நூற்றாண்டின் சிறந்த எழுத்தாளர்களை தெரிவு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்ப படிவங்களை ஆரியகுளம் சந்தியில் உள்ள பணிமனையில் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கட்டடம் புனரமைப்பு

(புலோலி)

வல்வெட்டித்துறைமானாங்கானை திருமமன் சனசமூக நிலையத்திற்கான கட்டடமொன்று சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டட நிர்மாணத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்திலிருந்து ஒரு இலட்சம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. (க-52)

## சைக்கிள் திருட்டு

(திருநெல்வேலி)

வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றுமுன் தினம்மாலை 6 மணி அளவில் இடம் பெற்றது. யாழ். நகரில் அண்மை நாட்களாக சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-76)

## உதவிப்பணம் வழங்கவில்லை

[திருநெல்வேலி]

வேலணை பிரதேச சபைக் குட்பட்டபொதுசனமாதாந்த உதவிப் பணம் பெற்றுவருகின்ற மக்களுக்கு தைமாதத்திற்குரிய உதவிப்பணம் இன்னும் வழங்கப்படவில்லை. இதனால் அப்பகுதி மக்கள் நிதி நெருக்கடியை எதிர் நோக்குவதாக தெரிய வருகிறது. (க-76)

தள்ளா விளையுளும்
தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு
- குறள்

# வலம்புரி

## மண்ணும் மொழியும்

எங்கள் சிந்தனை நல்லோர் மாட்டே தலையங்கம் பேசப்போவது அரசியல் அல்ல. அவ்வாறு எண்ணி ஏமாந்தால் பொறுப்பு எங்களுடையது அல்ல. மண்ணின் வளம் பற்றி விஞ்ஞான ஆய்வுகள் விதந்து கூறும். ஆனாலும் எங்கள் மண் விஞ்ஞானி கூறிய வளங்களோடு மேலான வளமான அன்பினையும் கொண்டுள்ளது. அல்லாவிட்டால் தன் நாட்டை மறந்து யாழ். மண்ணை பெருமையுடன் தனதாக்கிக் கொள்வாரா ஆங்கிலேய நாட்டுத்துறவி.

ஐரிஷ் நாட்டு யாழ்ப்பாணத்தான் என்று தன்னைப் பெருமையுடன் கூறிக்கொண்டவர் லோங் அடிகளார். கல்விப் பணிக்குத் தன்னை ஆளாக்கி நிர்வாகக் கதிரையில் நிமிர்ந்த நன்னடையுடனும் நேர்கொண்ட பார்வையுடனும் ஆட்சி புரிந்தவர் அடிகளார். அத்தகைய ஈர்ப்புக்குக் காரணம் மண்ணின் அன்பு வெள்ளமே.

வீரமா முனிவர் என்ற கால்வேல்டு அடிகளார் தனது கல்லறையில் நான் ஒரு தமிழ் மாணவன் எனப் பொறிக்கப்பட வேண்டுமென அவாவினார். அந்த அவாவுக்குக் காரணம் எங்கள் தமிழ் மொழியே. மொழிகளை வகைப்படுத்தி விதப்புரை வழங்கும் போது பக்திக்கு ஒரு மொழி தமிழ் என்றனர்.

தித்திக்கத் திருவாசகம் தந்த மணிவாசகனால் அந்நிலை நற்றமிழுக்கு உண்டாயிற்று. இஃது இவ்வாறிருக்கபுலம்பெயர்ந்து வாழும் தமிழர் கூட்டம் அக்கரைப் பச்சையில் அமர்ந்து இக்கரைப் பச்சை சருக்கரை போல் இனிப்பதை இதயம் கொள்ளாமல் இல்லை. இந்துவின் நித்திலம்- சிந்தையகலா செம்மைநிறை நாடு என்று "அங்காலயக்கும் பெருமூச்சு எமக்கு எட்டாமல் இல்லை.

மேற்போந்த கருத்துக்கள்- உண்மை நிலைகள் எங்கள் மொழியின், மண்ணின் பெருமை எத்தகையது என்பதை எடுத்துக் காட்டுகின்றதே. இந்த உண்மையை என்றோ உணர்ந்த பாரதி பெற்ற தாயும்பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்த தென்றான். அந்த உணர்ச்சிப் புலவன் இன்றில்லை. பேச்சும் மூச்சும் பெற்ற தாய்க் காகுக.

- அன்புடன் ஆசிரியர்

தனங்களப்பு விவசாயிகளுக்கு

# தமது வயல் பிரதேசத்திற்குக்கிட்ட செல்லக்கூட அனுமதிமறுப்பு

(சாவகச்சேரி)

தனங்களப்புப் பகுதி விவசாயிகள் அறுவர் கொண்ட குழு ஒன்று தமது வயற்பிரதேசத்தினை பார்வையிட அழைத்துச் செல்லப்பட்ட போதும், இவர்களை வயலிற்கு அண்மையில் செல்ல விடாது எட்ட நின்றே பார்வையிட அனுமதிக்கப்பட்டதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வயலிற்கு அண்மையில் சென்று பார்த்தால் மட்டுமே நெல்லின் சரியான அறுவடைப் பருவத்தை அறிய முடியும். அத்துடன் வயலிற்குள் நிற்கும் நீரை வெளியேற்றிஅறுவடைக்குத் தயார் நிலைப்படுத்த வேண்டும். ஆனால் அண்மையில் சென்று பார்வையிட அனுமதிக்கப்படாததால் அறுவடை சாத்தியப்படவில்லை என விவசாயிகள் மத்தியில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு விவசாயியும் அரும்பாடுபட்டு விளைவித்த நெற்பயிரை சரியான பருவத்தில் அறுவடை செய்ய முடியாது. பருவம்தப்பிக் கொண்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தின் பயன் தரு மரங்களானபனை, தென்னை போன்றன அதிகளவில் தறிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சரியான பருவத்தில் அறுவடை செய்து எடுத்து வருவதற்கு மேலதிகாரிகளையும், பாதுகாப்புப் படையினரையும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சார்பிலும், விவசாயிகள் அமைப்பின் சார்பிலும் கேட்டுக் கொள்வதாக விவசாயிகள் அமைப்பின் செயலாளர் த. சிதம்பரப்பிள்ளை குறிப்பிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-21)

## நாளை கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் (மிஷன் பாடசாலை வீதி) அருள்மிகு ஸ்ரீச முண்டாதேவி சமேத ஞான வைரவர் தேவஸ்தானம் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 6. 37 முதல் 7. 30 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் பிரதம குரு பிரம்மஸ்ரீ சாமி. ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்களால் நடாத்தி வைக்கப்படும். (க)

## புதிய அரசியல் யாப்பு தொடர்பாக பொ. ஐ. மு. சகல கட்சிகளும் உடன்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, நீதி அரசியலமைப்பு இனவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ், அமைச்சர்களான தர்ம சிறி சேனநாயக்க, டி. எம். ஜெயரத்தின, சுசில்முனசிங்க மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றிய புதிய அரசியல் யாப்புப் பற்றிய கலந்துரையாடல்கள் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் உத்தேச புதிய அரசியல் யாப்பின் கீழ் அதிகாரப் பரவலாக்கல் எவ்வாறு இடம் பெற வேண்டும் என்பது தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் உடன்பாடு கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சிகள் எட்டியுள்ள உடன்பாடுகள் குறித்து தமிழ்க் கட்சிகளுக்கு அறிவிக்கப்படும் என பொ. ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## மோட்டார் சைக்கிள் விபத்து

(நீராவியடி)

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் மட்டுவிலைச் சேர்ந்த சதாசிவ ஐயர் என்பவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கைதடிச் சந்தியில் இடம்பெற்ற இவ் விபத்தில் மேற்படி நபருடன் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதியதாலேயே இவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் படையினரும் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-78)

## மாணவி சாதனை

(புலோலி)

யாழ்.பல்கலைக்கழக மருத்துவத்துறை இறுதி ஆண்டுப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பில் செல்வி சுஜாதா மகாலிங்கம் முதன்மைச்சித்தியைப் பெற்றார்.

அண்மையில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் மருத்துவம், கிளினிக்கல் மருத்துவம் ஆகியவற்றில் தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளதோடு மருத்துவ பட்டப்படிப்பில் இறுதிப் பரீட்சையில் திறமை காட்டியதற்காக டாக்டர் வைத்திலிங்கம் நடராஜன் ஞாபகார்த்த பரிசையும் தட்டிக்கொண்டார்.

வல்வெட்டியைச் சேர்ந்த இவர் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் பழைய மாணவராவார்.

இவர் வடக்கு — கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங்கத்தின் சிரேஸ்ட புத்திரியும் ஆவார். (க-52)

## இளைஞர்கைது

(வரணி)

வரணி இயற்றாலைப்பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் சச்சிதானந்தம் என்ற இளைஞர் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரால்கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அயல் வீட்டில் இருந்து தனது வீட்டிற்குச் செல்கையில் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (க-28)

## மரக்கறி விலை வீழ்ச்சி

(நெடுந் தீவு)

உள்ளூரில்மரக்கறிவகைகள் உற்பத்திகணிசமான அளவில் உள்ளதால் வெளியிடங்களில் இருந்து மரக்கறி வகைகளை எடுத்து வருவதை வியாபாரிகள் தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர். யாழ்ப்பாணத்திலும் பார்க்க இப்போது இங்கு மரக்கறி வகைகள் மலிவாகப் பெறக் கூடியதாக உள்ளது. (க)

# ஒருவரால் கற்பிக்கப்படும் எந்த விடயமும் தொடர் மறுபரிசீலனைக்கு விடப்பட வேண்டும்

ஏ.சி.ஜோர்ஜ்
(யாழ். கல்வி வலயம்)

பாடசாலை மட்ட கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தில் கற்றல், கற்பித்தல் செயன்முறையின் ஈற்றில் மாணவர் அடைந்துகொள்ளும் தேர்ச்சிகள் அல்லது முன்னேற்றம் என்பனவற்றை கணிப்பீடு செய்யும் கருவிகளில் ஒன்றாக அவதானிப்புப் பத்திரமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இன்று 6ம், 7ம், 9ம், 10ம், தரங்களில் இக் கருவியானது பயன் படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய கல்வி நிறுவகமும் அவதானிப்புப் பத்திரத்தினை ஒருகணிப்பீட்டுக் கருவியாக பயன்படுத்த வேண்டும் என விதந்துரைத்துள்ளது.

புதிதாக 7ம், 9ம், தரங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாழ்க்கைத் தேர்ச்சிகள் பாடத்தின் ஒரே ஒரு மதிப்பீட்டுக் கருவியாக அவதானிப்புப் பத்திரத்தினை பயன் படுத்த வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. இவ்வாறு இன்று கணிப்பீட்டுச் செயன் முறையில் அவதானிப்புப் பத்திர மொன்றின் முக்கியத்துவம் தவிர்க்கப்பட முடியாதவொன்றாகி வருகின்றது. தேசிய கல்வி ஆணைக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் 'ஒருவரால் கற்கப்படும் எதுவும் தொடர்ச்சியான மறுபரிசீலனைக்கும் சரி செய்தலுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்' இந்த இலக்கினை அடைய பா. ம. க. நிகழ்ச்சித் திட்டமும் அவதானிப்புப் பத்திரமும் உதவுகின்றது.

அவதானிப்புப் பத்திரம் ஒன்றின் முக்கியத்துவம் மேலே கூறியவாறு தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக இருந்தபோதும் யாழ்ப்பாண பாடசாலைகளில்இவ்விடயம் குறித்த தெளிவான பார்வை ஆசிரியர்களிடமும் கல்விப் புலம் சார்ந்த மற்றையோரிடமும் காணப்படவில்லை.

இதனால் இதன் அமுலாக்கமும் ஏனோ தானோ என்ற போக்கில் இருக்கின்றது. மேலும் அவதானிப்புப் பத்திரம் குறித்து பாடசாலைக்குப் பாடசாலை வேறு, வேறு செயற்பாடுகளும் காணப்படுகின்றது. இக் காரணங்களை முன்னிட்டு இக் கட்டுரையானது அவதானிப்புப் பத்திரம் ஒன்றில் ஆசிரியர்களிடமும் ஏனையோரிடமும் காணப்படும் விளக்கமின்மைகளை ஓரளவு தெளிவுபடுத்த முனைகின்றது.

முதலில் அவதானிப்புப் பத்திரமொன்றிற்கு பண்பு நிலை விருத்தி அறிக்கை என்றவொரு பெயரும் பாவனையில் உள்ளது. மேலும் 18 விதமான பண்புகளை அவதானித்து அவற்றில் மாணவரிடம் காணப்படும் விருத்தி நிலையினை அறிக்கைப் படுத்துதல் என்னும் போக்கு பெரும்பாலான ஆசிரியர்களிடம் காணப்படுகின்றது. ஆனால் உண்மையில் அவதானிப்புப் பத்திரமொன்றில் அடங்கியுள்ள 18 விடயங்கள் முழுவதும் பண்பு நிலை தொடர்பானது இல்லை. அடுத்ததாக அவதானிப்புப் பத்திரமொன்றினை கணிப்பீட்டுக் கருவியாக பயன்படுத்துவது மாணவர்கள் இடத்தே விருத்தி செய்ய வேண்டும் என எதிர் பார்க்கப்படும் பண்புகளை விருத்தி செய்வது அடிப்படை நோக்கமுமல்ல.

இவற்றை மேலும் விளக்குவதற்காக சில விடயங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது. 1992 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் கற்றல், கற்பித்தல் செயல் முறையின் ஈற்றில் அடைந்து கொள்ள எதிர்பார்க்கும் தேசிய இலக்குகள். மற்றும் அடிப்படைத் தேர்ச்சிகள் என்பவற்றுக்குக் கலைத்திட்டம் ஓர் அடித்தளத்தினை வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. இதில் அடிப்படைத் தேர்ச்சிகள் என 5 தேர்ச்சிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவையாவன

(1) தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சிகள்

(2) சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள்.

(3) நல்லொழுக்கம் சமயம் சார்ந்த தேர்ச்சிகள்.

(4) விளையாட்டு ஓய்வு, என்பன சார்ந்த தேர்ச்சிகள்.

(5) கற்றலுக்காக கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

இவ்வைந்து வகையான தேர்ச்சிகளின் முன்னேற்றம் விருத்தி என்பவற்றை கணிப்பிடவே அவதானிப்புப் பத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. இதனாலேயே அவதானிப்புப் பத்திரத்தினை பண்பு நிலைவிருத்திப் பத்திரம் என அழைத்தல் தவறானது எனவும் அவதானிப்புப் பத்திரத்தில் பண்புகளை மட்டும் கணிப்பீட்டிற்குள்ளாக்குவதில்லை எனவும் ஏற்கனவே கூறியிருந்தேன். அவதானிப்புப் பத்திரமொன்றில் இடம் பெறும் 18 விடயங்களை அவதானித்தல் பொருத்தமாகும்.

இப்போது தே.க. நிறுவனம் இதனை 21 ஆக அதிகரிக்க முயற்சி செய்கின்றது.

(தொடரும்)

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# கைதுசெய்யப்பட்ட சிவகுமாரை பரிசோதனைக்கு உட்படுத்தவும்

## யாழ். மாவட்ட நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைப்புச் சட்டத்தின் கீழ் காங்கேசன் துறை பொலிசாரால் யாழ். நீதிமன்றில் நேற்று ஒருவர் ஆஜர்படுத்தப்பட்டார். நீர்வேலியைச் சேர்ந்த இரட்ணம் சிவகுமார் என்பவரே யாழ் மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டவராவார்.

இவர் ஊரெழு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளின் குழுவினர் பார்க்கச் சென்ற போதுதான் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கூறியதாகவும் அதன்பின்தான் மேலும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகவும் அவர் நீதிபதியிடம் கூறியதைத் தொடர்ந்து இவரை எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி வரை யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கும்படியும் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன் யாழ் சட்ட வைத்திய அதிகாரியினால் இவர் பரிசோதிக்கப்பட்டு அதனது அறிக்கையை சமர்ப்பிக்கும்படியும் நீதிபதி யாழ். சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (4)

## கிராம சேவையாளர் கைதானார்

(கொழும்பு)

ஊறுகொடவத்தை பஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக கிராமசேவையாளர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இக் கிராமசேவகர் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று பஸ்ஸில் பிரயாணம் செய்தது குறிப்பிடத்தக்கது.

### பிணையில்...

கக்கைது செய்யப்பட்டவர்களை யாழ்,மாவட்ட நீதிபதி இ. த, விக்னராஜா ஐம்பதாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

சபாரட்ணம் ஜெயரட்ணம் துரைச்சாமி சுந்தரலிங்கம், இளையகுட்டி தர்மகுலசிங்கம் ஆகியோரே மேற்படி வழக்கில் நீதிபதியால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர். (4)

### ஜனாதிபதியுடன்...

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ்.மாவட்ட எம்,பியுமான டக்ளஸ் தேவானந்தா, எஸ். தவராசா எம்.பி ஆகியோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திருமலை எம்.பி. இரா.சம்பந்தன், உப தலைவர் வி.ஆனந்தசங்கரி, மட்டக்களப்பு எம்.பி. யோசப் பரராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்,

இச் சந்திப்பின் போது நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸும் கலந்து கொள்வார்.

### ஜனாதிபதி...

பெயர்வின்பின் 6ம் ஆண்டு மீண்டும் குடியேறிய போது சொந்த இடங்களிலேயே இருக்கும்படி வற்புறுத்தப்பட்டது.

அப்போது குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மீன்பிடிக்கப் அனுமதிக்கப்பட்டிருந்தது இவ்வனுமதி எமது சீவனோபாயத்தில் ஒரு பகுதியை மட்டுமேயாக்க உதவியது. ஆனால் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 11ந் திகதி குறித்த இடங்களில் மீன்பிடிக்கத் திடீரென் மறுக்கப்பட்டதனால் விலையுயர்ந்த வலைகள் வள்ளங்கள் கடலிலேயே விடப்பட்டு அழிந்து போகும் நிலையிலுள்ளது.

அதே வேளை மீனவக் குடும்பங்கள் தம் அன்றாடச் சீவியத்திற்கே அல்லலுறும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

யுத்த நெருக்கடிகளால் பல தடவைகள் பல வகை இழப்புக்களையும் அனுபவித்த மீனவக் குடும்பங்களுக்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள தடையானது அவர்களை மேலும் நிலை குலையச் செய்துள்ளது.

எனவே இதுவிடயத்தில் தாங்கள் தலையிட்டு நாம் இழந்த பல கோடி பெறுமதியான மீன்பிடி உபகரணங்களுக்கு நட்டஈடு பெற்றுத் தருவதற்கு வழிவகுப்பதோடு உடனடியாகக் குறிப்பிட்ட இடங்களில் மீன்பிடித் தொழிலைமேற் கொள்ளவும் அனுமதிக்க வேண்டுமெனவும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது: (ந)

### ஊர்வலத்தில்...

★ பட்டதுன்பம் போதும் இனிப்படமுடியாது துயரம்

★ அரசே தொழில் செய்ய விடு, இல்லையேல் நஸ்ட ஈடு கொடு

★ கொல்லாதே, கொல்லாதே கடல் தடையால் கொல்லாதே,

★ எமது சிறுவர்கள் போஷாக்கின்மையால் அழிவதனை உடன் நிறுத்து. வ. 07


# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன இயக்குநர்
திரு. ந. ஜெயபாலசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
நடராஜா மனோன்மணி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மாணவர்கள்
யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனம்
(J. T. I.)
52/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (00152)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## குமார்பொன்னம்பலம் கொலைச்சந்தேகநபர் உருவம் கணனி மூலம் பதிவு

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக கொலைச்சந்தேக நபர் சாந்தாவுடன் சென்ற மற்றொருவரை தேடி வருவதாகக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்

குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக நேரடியாகக் கண்ட ஒருவரின் சாட்சியத்தின் அடிப்படையில் அவரது உருவம் கணனி மூலம் வரைவு செய்யப்படுவதாகவும் அதன்பின் அவரது படம் மக்கள் முன் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் சந்தேக நபரைக் கைது செய்யவும் மக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பந்துல குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

# மறவன்புலோ,தனங்களப்பு பகுதியில் நெல்அறுவடைக்கு அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழிப் பகுதி வயல்களில் நெல் அறுவடையை மேற்கொள்வதற்கு நாவற்குழி இராணுவ அதிகாரி அனுமதி அளித்துள்ளார் எனினும் மறவன்புலோ தனங்களப்புப் பகுதிகளில் அறுவடைக்கு அனுமதிக்கப் படவில்லை.

தனங்களப்பு, மறவன் புலோ, கைதடி நாவற்குழி பகுதி மக்கள் கிராமசேவையாளர்கள் ஊடாக நாவற்குழி இராணுவ அதிகாரியுடன்தொடர்பு கொண்டதை அடுத்து அப்பகுதிகளுக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்ததன் பின்னரே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தனங்களப்பு, மறவன்புலோ பகுதிகளில் அறுவடையை மேற்கொள்வதற்கு தன்னால் அனுமதி வழங்க முடியாது எனவும் அப்பகுதி சாவகச்சேரி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இப்பகுதி இருப்பதால் அப்பகுதி இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட இடங்களுள் அதிகளவு விளை நிலங்களை உள்ளடக்கியது என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

### மௌனறகலை...

ருந்த குண்டு வெடித்தது. இதனால் 45 பேர் காயம் அடைந்தனர்.

காயமடைந்த இவர்கள் பதுளை, பிபிலை, மெதகம வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்து பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆறு பேரில் இருவர் அங்கு உயிரிழந்தனர்.

இதேவேளை இரண்டாவது குண்டுவெடிப்புச் சம்பவம் காலை 9.10 மணியளவில் பிபிலை பஸ் நிலையத்தில் தரித்து நின்ற பஸ்வண்டியில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பஸ்வண்டி சேதமடைந்த போதிலும் பயணிகள் எவருக்கும் காயமேற்படவில்லை.

இக் குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகளை இனங்காணும் பொருட்டு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஊவா மாகாணப் பிரதம பொலிஸ் அத்தியட்சகர் தயாஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

### விசாரணை...

அமைச்சர் பட்டிவீரக்கேன் தலைமையில் நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக்குழுவினரின் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டு உத்தரவிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

புங்குடுதீவு சாரதாம்பாள் கொலை தொடர்பாக எதுவித நடவடிக்கைகளையும் அரசு எடுக்காது விட்டமையும் எவரையும் இது வரை கைது செய்யாததாலும் கூட்டணி எம். பி இரா. சம்பந்தன், யோகராசன் எம். பி ஆகியோர் முறைப்பாடு செய்திருந்ததை ஒட்டியே இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### மண்ணெண்ணெய்...

லீற்றர் மண்ணெண்ணெய் 15.96 சதமாகவும், ஒரு லீற்றர் டீசல் 15.16 சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

உலக சந்தையில் மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டதன் விளைவாகவே இவ் விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ். மத்தியபஸ்நிலையம்விஸ்தரிப்பு

# 16 கடைகளையும் அகற்ற முடிவு புதிய இடம் ஒதுக்கப்பட்டுள்ளது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் அமைந்துள்ள அங்கீகாரமற்ற 16 கடைகளை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். மாநகர சபை அலுவலகத்தில் மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வணிகர் கழகப் பிரதிநிதிகள் வடபிராந்திய போக்குவரத்துச்சபைப் பிரதிநிதிகள் பத்திரிகையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் யாழ். பஸ் நிலைய வைரவர் கோயிலின் முன்னால் உள்ள 16 கடைகளுக்காக சோமசுந்தரம் வீதி (பெரியகடை வீதி) கே. கே. எஸ். வீதி ஆகியவற்றுக்கிடையில் உள்ள பகுதியில் 10 X 7 அடி அளவுடைய கடைகள் வழங்கப்படுவதற்கும் மார்ச் மாதம் 1 ஆம் திகதிக்கு முன் மேற்படி பஸ் நிலைய கடைகள் அகற்றப்படுவதற்கும் உடன்பாடு காணப்பட்டதாகவும் மாநகர ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை யாழ். பஸ் நிலையத்திற்கு 25 இலட்சம் ரூபா செலவில் சட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

### கடற்றொழிலாளர்--

சங்க அலுவலகத்தையடைந்து அங்கிருந்து றக்கா வீதியூடாகவும் சோமசுந்தரம் வீதியூடாகவும் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தை அடைந்து பின் அங்கிருந்து சென்று கச்சேரியை அடைந்தது,

இப்பேரணியில் சென்றவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். வதிவிடப் பிரதிநிதி பியர் பேணர்டிடம் தமது மகஜரை கையளித்தனர். மகஜரைப் பெற்றுக்கொண்ட பியர் பேணர்ட் தாம் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்வதாகவும் மீனவர்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய ஆவன செய்வதாகவும் தெரிவித்தார். மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். அதிகாரி எஸ். ஜீவனேஸ்வராவிடமும் யாழ்.அரச அதிபரின் மகஜர், அரச அதிபரும் மேலதிக அரச அதிபரும் கொழும்பு சென்றுள்ளதால்யாழ் பிரதேசசெயலாளர்செந்தில்நந்தனனிடம் கையளிக்கப்பட்டது மகஜரினை உடனடியாக கச்சேரி தொலை நகல் மூலம் அரச அதிபருக்கு ஊடாக ஜனாதிபதியிடம் சேர்ப்பிப்பதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

குருநகர் கடற்றொழிலாளர் சங்கம், குருநகர் சிறகு வலைச்சங்கம் குருநகர் சென் ஜேம்ஸ் இழுவைறால்மட்டிச் சங்கம், யாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம், கொழும்புத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி பேரணியில் யாழ். ஆட்டோ சங்கம் மற்றும் யாழ். வகுப்புத் தொழிலாளர் சங்கம் பேரன் பல்வேறு பொது அமைப்புக்களும் கலந்து கொண்டன. [வ-07]

### இம்முறை..

றும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது.

மேலும் அவசர காலச் சட்டப் பிரேரணையில் கலந்து கொள்ளாமலிருந்து வந்ததை தவிர்த்து இனிமேல் அவசரகாலச் கட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதெனவும், இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானம் ஐ,தே. கட்சியில் இருந்து விலகிய அணியினரின் நிலைப்பாட்டை அறியும் பொருட்டே மேற்கொள்ளப்பட்டதாகஅரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ந)

### படையினர்---

காகிப் பலியானார் எனவும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பின்பு அவரது உடலை படையினர் எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது .(ந-21)

### பொலீஸாரை--

தமிழ் இளைஞர்களுள் பெருமளவானவர்கள் மிகவும் இளவயதுடையவர்கள் என்பதும் இவர்களது கைது தொடர்பாக ஆர். யோகராசா எம். பி. தொல்லை தவிர்ப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.